**தேதி :** 24.09.2025 **SC.No. :** 60/2024 PW :3 ராசாத்தி

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

என் வீட்டை சுற்றிலும் காம்பவுண்ட் சுவர் உண்டு என்றால் சரியல்ல. எங்கள் வீட்டில் மாட்டு தொழுவம் இல்லை. சம்பவத்திற்கு முன்னர் என்னுடைய கணவருக்கும், எதிரிக்கும் ஏற்பட்ட பிரச்சனையை என்னுடைய கணவர் சொல்லி கேள்விபட்டேன். சம்பவம் சுமார் 10 நிமிடம் நடந்தது. சம்பவத்தை பார்க்க தெருவில் உள்ள நபர்கள் வரவில்லை. சம்பவத்தை குறித்து என்னுடைய கணவருக்கும், என்னுடைய மகனுக்கும், எனக்கும் மட்டும் தான் தெரியும் என்றால் சரிதான். என்னுடைய மகனின் இரத்தம் தரையில் படிந்திருந்தது என்றால் சரிதான். நான் என்னுடைய மகனுடன் மருத்துவமனைக்கு செல்லவில்லை, எனது கணவர் அழைத்து சென்றார். பின்னர் நான் சென்றேன். சம்பவத்தை கேள்விபட்டு போலீசார் என் வீட்டிற்கு வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு 2 மகள்களும், ஒரு மகனும் உள்ளார். அவர்களுக்கு திருமணம் ஆகி விட்டது. என்னுடைய மருமகன்களின் பெயர் கண்ணன் மற்றும் அழகுபாண்டி ஆகும்.

நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எதிரி சுடுகாடு பக்கம் வைத்து என் கணவரை திட்டவில்லை என்றாலும், எங்கள் வீட்டிற்கு வந்து எனது மகனை வெட்டவும் இல்லை என்றாலும் சரியல்ல. எனது மகனுக்கு பல்வேறு தவறான நடவடிக்கைகள் இருந்தது என்றாலும், அதில் பாதிக்கப்பட்ட நபர் எனது மகனை வெட்டி காயப்படுத்தினார் என்றாலும்,

மேற்படி விபரத்தை வெளியே சொன்னால் அவமானமாகி விடும் என்று, பின்யோசனையிட்டு எதிரியின் மீது பொய்யாக புகார் மனு கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. சம்பவநாளில் எதிரி ஊரில் இல்லை என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.25 11:36:10 +0530

**தேதி :** 24.09.2025 **SC.No. :** 60/2024 PW :**4** ஆனந்தராஜ்

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

அ.சா.1, அ.சா.2 என்னுடைய உறவினர்கள் என்றால் சரிதான். வீ.கே.புதூர் காவல்நிலையத்தினர் எந்த தேதியில் என்னை காவல்நிலையம் வருவதற்கு சொன்னார்கள் என்றால் விசாரணைக்கு முந்தின நாள் சொன்னார்கள். எனக்கு தேதி ஞாபகமில்லை. நானும், உதயகுமாரும் ஒரே பைக்கில் சென்றோமா? என்றால் ஒரே பைக்கில் சென்றோம். உதயகுமாரை யார் அழைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஊத்துமலையிலிருந்து நான் எத்தனை மணிக்கு கிளம்பினேன் என்றால் சாயங்காலம் 04.00 மணிக்கு கிளம்பினேன். ஊத்துமலையிலிருந்து காவல்நிலையம் செல்ல 20 நிமிடம் ஆகும். காவல்நிலையத்திற்கு போய் எத்தனை மணி நேரம் இருந்தேன் என்றால் கால் மணி நேரம் இருந்தேன். பின்னர், கருவந்தா சென்றேன். கருவந்தா செல்லும் போது மாலை 05.30 மணியிருக்கும். ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் தான் எழுதினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் வீ.கே.புதூர் காவல்நிலையம் செல்லவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அ.சா.1 எனது உறவினர் என்பதினால் அவர்களுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.25 11:36:22 +0530